# பனைச் செல்வம்

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர் :

வே. வ. இராமசாமி

வெளியிடுவோர் :

சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்

தியாகராயநகர் சென்னை - 17

சோபகிருது௵ மாசி௴ விலை : 25 காசு

# பொருளடக்கம்

பக்கம்

1. திருச்செங்கோட்டு முடிவு—(தலையங்கம்) ... 1

2. தமிழ்நாடு பனைவெல்ல ஊழியர்கள் மூன்றுவது மாநாடு:

(அ) வரவேற்புரை—திரு. ப. இராமலிங்கம் ... 5

(ஆ) தலைமைப் பேருரை—திரு. வே. வ. இராமசாமி ... 8

(இ) துவக்க உரை—திரு. யு. என். தேபர் ... 13

(ஈ) சிறப்புரை—திரு. கஜானன் நாயக் ... 14

(உ) தீர்மானங்கள் ... 17

(ஊ) பனைத்தொழில் பொருட்காட்சி ... 20

3. தேசிய பனைவெல்ல தின விழா ... 21

4. உற்பத்தி-விற்பனை விதிகள் திருத்தம்; மற்றும் அறிக்கைகள் 23

ஆண்டுச் சந்தா ரூ. 3

---

அட்டைப் படம்:

மாநாட்டுப் பந்தல் முகப்புத் தோற்றம்,
கோபுரம் போன்று பனை ஓலையால் அமைக்கப்பட்டது.

## Statement about ownership and other particulars about newspaper PANAI SELVAM

*(To be published in the first issue every year after last day of February)*

# FORM IV

(See Rule 8)

| | | | |
|---|---|---|---|
| 1. | *Place of Publication* | ... | 66, Kodambakkam High Road, T.Nagar, Madras-17. |
| 2. | *Periodicity of its Publication* | ... | Monthly. |
| 3. | *Printer's Name* | ... | Sri K. P. Kannan, (Co-operative Sub-Registrar), Secretary, The Central Co-operative Printing Works Ltd., Madras-2. |
| | *Nationality* | ... | Indian. |
| | *Address* | ... | 1/17, Mount Road, Madras-2. |
| 4. | *Publisher's Name* | ... | Sri V. V. Ramaswami, President, The Madras State Palmgur Co-operative Federation. |
| | *Nationality* | ... | Indian. |
| | *Address* | ... | 66, Kodambakkam High Road, T.Nagar, Madras-17. |
| 5. | *Editor's Name* | ... | Sri V. V. Ramaswami. |
| | *Nationality* | ... | Indian. |
| | *Address* | ... | 66, Kodambakkam High Road, T.Nagar, Madras-17. |
| 6. | *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital* | ... | The Madras State Palmgur Co-operative Federation Ltd., own the Journal. |

I, V. V. Ramaswami, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

V. V. RAMASWAMI,
*Signature of Publisher.*

*Date:* 1—3—1964.

# பனைச் செல்வம்

(மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளன வெளியீடு)

பனை 4 சோபகிருது ஹு மாசி மீ பாளை 5

## திருச்செங்கோட்டு முடிவு

(வே. வ. இராமசாமி)

---

சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோட்டில் ஜனவரி மாதம் 26, 27-ம் தேதிகளில் நடைபெற்று முடிந்த தமிழ்நாடு பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூன்றாவது மாநாடு பனைத்தொழில் வரலாற்றில் ஒரு சிறப்பான அம்சமாக அமைந்தது என்பதில் ஐயமில்லை. முதல் மாநாட்டுக்குப் பின்னர் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் காரணமாக கடந்த சில ஆண்டுகளுக்குள்ளாக இத்தொழில், வளர்ச்சியிலும், சமுதாயச் சீரமைப்பிலும், பொருளாதார மறுமலர்ச்சியிலும் மாபெரும் திருப்பம் ஏற்பட்டுள்ளதென்பதை இம்மூன்று மாநில மாநாட்டிற்கும் தொடர்ந்துவந்து பங்கு கொண்ட பலதரப்பட்ட பெருமக்களும் அறிவர். நிர்க்கதியாக, நிராதரவாக இருப்பதாகத் தங்களைத் தாங்களே எண்ணி, வேதனைப் புலம்பல்களுக்கிடையே தொழில் புரிந்துவந்த பனைத்தொழில் வல்லுநர்கள் இன்று நெஞ்சுயர்த்தி, நேர்மைத் தொழில் புரிகின்றோம் என்ற அகமகிழ்வுடன் திகழ்வதை நாம் இன்று காணமுடிகின்றதென்றால் அதற்கு மதுவிலக்கே மாபெருங் காரணம். மதுவிலக்கினால் ஏற்பட்ட இழப்புக்களையும், இழந்த தொழில் வாய்ப்பையும் ஈடுகட்ட எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் நல்ல பயனுள்ளதாகவும், பலனுள்ளதாகவும் அமைந்திருக்கின்றன என்பது நன்கு விளங்கும்.

# "பனைமரமாம் பனைமரமாம்"

வி. குயின்றைன் பர்ணுண்டோ, தகணூ

தடித்து வளரும் பனைமரமாம்,
தரணியர் போற்றும் பனைமரமாம் ;
பாரினில் பாங்காக வளர்ந்திடுமாம்,
பருகிட பதநீர் தந்திடுமாம்.

கருத்த உடலதைக் கொண்டதுவாம்,
கவிஞர்கள் போற்றிட்ட பனைமரமாம் ;
பச்சை ஓலையை சிரமேற்கொண்டு,
பசிதீர்க்க பழமும் தந்திடுமாம்.

பாய்க்கூடை முறங்கள் பெட்டி தந்து,
பாங்காக மக்களுக் குதவிடுமாம் ;
தும்பைத் தந்தது உதவிடுமாம்,
தூரத்து தேசமும் வாங்கிடவே.

தலையாயர் நட்பினைக் குறித்திடுமாம்,
தரிசினில் வளரும் பனைமரமாம் ;
கண்டோர் வியக்கும் தொழிலனைத்தும்,
கற்பகம் தந்து உதவிடுதே !

அகில இந்தியக் கதர், கிராமக் கைத் தொழில் கமிஷன் தலைவர் திரு. தேபர், மாநாட்டுக்கு ஊர்வலமாக அழைத்து வரப்படுகிறார். அவருடன் சென்னை மாநில சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமியும், கதர், கிராமக் கைத் தொழில் கமிஷன் துணைத் தலைவர் திரு. க. அருணாசலமும் இருக்கின்றனர்.



பிரார்த்தனையுடன் மாநாடு ஆரம்பம்.

# தமிழ்நாடு பனைவெல்ல ஊழியர்கள் மூன்றுவது மாநாடு, திருச்செங்கோடு.

சென்ற ஜனவரி மாதம் 26, 27 ஆகிய தேதிகளில் திருச்செங்கோட்டில் நடைபெற்ற பனைவெல்ல ஊழியர்கள் மாநாடு மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஏனெனில், நல்ல வேலை செய்கிற தொழில் வல்லுநர்களுக்கும், மாநிலத்திலுள்ள சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கும் பரிசுகள் வழங்கப் பட்டன. இன்னும் மகாநாட்டின்போது விரைவாக 100 மரமேறிய வீரக் கன்னிகை (வயது 15)க்கு ஒரு தங்க மோதிரம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

கடந்த 1963-வது ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நாகர் கோவிலில் நடைபெற்ற அனைத்திந்திய பானை சீவி பதநீர் இறக்கும் போட்டியில் வெற்றியடைந்த வல்லுநர்களுக்கு முதல், இரண்டு பரிசுகள் அளிக்கப்பட்டன.

இன்னும் இம்மாநாட்டை யொட்டி பனைப்பொருள்கள், கிராமக் கைத்தொழில் காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது மிகவும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

மாநாட்டின் முகப்புப் பந்தல் ஒரு கோவிலின் கோபுரத்தைப் போல பனை ஓலைகளால் செய்யப்பட்டிருந்தது ஒரு கம்பீரமான தோற்றத்தை அளித்தது. இந்த இரண்டு நாட்களும் பெரிய திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. மாநாட்டிற்கு 2,000 பிரதிநிதிகள் வந்திருந்ததுடன் சேலம் மாவட்டக் கிராமங்களிலுள்ள மக்களுக்கு பனைத்தொழில் பற்றி விவரமாகத் தெரிந்துகொள்ள இம்மாநாடு வாய்ப்பு அளித்தது.

## வரவேற்புரை

### திரு. ப. இராமலிங்கம், தலைவர்,

*(சேலம் மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவு விற்பனை சம்மேளனம், சங்ககிரி.)*

மாநட்டின் நடவடிக்கைகள் பற்றிய விவரம் கீழே தரப்படுகிறது :—

### திரு. தேபருக்கு வரவேற்பு

ஜனவரி மாதம் 27-ந் தேதி காலையில், கதர், கிராமக் கைத்தொழில்கள் கமிஷன் தலைவர் திரு. தேபருக்கு ஒரு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பலரகக் கிராமப்புற மேளங்கள் முதலியவற்றுடன் திரு. தேபர் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். வழி நெடுகிலும், 'திரு. தேபர் வாழ்க', 'பனைத்தொழில் வாழ்க' என்று இடி முழக்கும்போன்ற ஒலிகள் எழுப்பப் பட்டன.

திருச்செங்கோடுப் பஞ்சாயத்துத் தலைவரும், மற்றவர்களும், வரவேற்பு இதழ்கள் வாசித்தளித்தனர்.

பின்னர் பனைமரத் தொழில் உற்பத்திகள் கண்காட்சியை திரு. தேபர் பார்வையிட்டார்.

### மாநாடு ஆரம்பம்

மாநாடு பிரார்த்தனையுடன் ஆரம்பமாயிற்று. முதலில் திரு. ப. இராலிங்கம்தமது வரவேற்புரையைப் படித்தார். அதன் விவரம் வருமாறு :

அகில இந்திய காதி கமிஷன் தலைவர் உயர்திரு யூ. என். தேபர் அவர்களே ; துணைத் தலைவர் உயர்திரு க. அருணசலம் அவர்களே ; அகில இந்திய பனைவெல்ல ஆலோசகர் உயர்திரு கஜானன் நாய்க் அவர்களே ; தமிழ்நாடு பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத் தலைவர் உயர்திரு வே. வ. இராமசாமி அவர்களே ; கதர் கிராமக் கைத்தொழில் கழக செயலாளர் அவர்களே : உறுப்பினர்களே ; தமிழ் நாட்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் வந்திருக்கும் சங்கப் பிரதிநிதிகளே ; பனைத் தொழில் புரியும்

வல்லுநர்களே! பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளே; பொதுமக்களே உங்கள் அனைவரையும் இன்று வரவேற்கும் வாய்ப்பு எங்களுக்கு ஏற்பட்டதைக் குறித்து பெரு மகிழ்ச்சியடைகிறோம். உங்களனைவரையும் வருக! வருகவென மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்.

கடையெழு வள்ளல்களில் இருவரான அதிகமான் நெடுமானஞ்சியும், வல்வில் ஓரியும் ஆண்ட கொங்கு மண்டலத்தில் இருபத்து நான்கு நாடுகளில் ஒன்றான பூந்துறை நாட்டின் தலைநகராக விளங்குவது திருச்செங்கோடு. பனைகள் சிறப்பாக வளர்ந்து பனைத் தொழில் வல்லுநர்களுக்கு வாழ்வளித்து வருமிடம் திருச்செங்கோடு. நமது தேச பிதா காந்தியடிகள் மதுவிலக்கை அமுல் நடத்த வேண்டுமென எண்ணினர்.

நமது தேசத்திலேயே மதுவிலக்கு முதன் முதல் அமுல் நடத்தப்பட்ட இடம் சேலம் மாவட்டந்தான். அப்பொழுது முதலமைச்சராயிருந்த உயர்திரு இராசகோபலாச்சாரியார் அவர்கள் அமுல் நடத்த திட்டம் வகுத்த இடம் திருச்செங்கோடுதான். பனைமரத் தொழிலாளருக்காக முதல் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்கப்பட்டதும் திருசெங்கோட்டில்தான். அகில இந்திய காதி கமிஷன் இங்கு ஒரு தேசிய ஞாபகார்த்தச் சின்னம் ஏற்படுத்த முடிவு செய்திருப்பதை அறிய மகிழ்ச்சியடைகிறோம். அது இந்த ஆண்டிலேயே செயல்படுத்தபடுமென எண்ணுகிறோம். இப்படி புகழ்பெற்ற திருச்செங்கோட்டில்தான் பல லக்ஷக்கணக்கான பனைத் தொழில் புரிந்துவரும் வல்லுநர்களின் மேம்பாட்டிற்கு வழிவகை காண நாம் கூடியுள்ளோம்.

தமிழகத்தில் மற்ற பகுதிகளைவிட பாண்டி மண்டலம், கொங்கு மண்டலம் ஆகிய பகுதிகளில்தான் பனை மரங்கள் அதிகம். தமிழகத்தில் மதுவிலக்கு அமுலாக்கப்படுவதற்கு முன் பனைத் தொழில் வல்லுநர்களில் ஒரு பகுதியினர் கள் இறக்கி வந்தனர். ஆயினும் கொங்கு மண்டலத்தில் பாதிக்கு மேற்பட்டவர்கள் தொன்று தொட்டே பதநீர் இறக்கி கருப்பட்டி செய்தே வந்திருக்கின்றனர். கள் இறக்கும் தொழிலை மக்கள் கேவலமாக நினைத்தனர். சமுதாயத்தில் கள் இறக்கியவர்கள் கீழாகக் கருதப்பட்டார்கள். சமுதாயத்தில் இவர்களுக்கு சமுத்துவம் வழங்கப்படவில்லை. கள் இறக்குவோர் ஒதுக்கப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர்.

மதுவிலக்கு அமுலாக்கப்பட்ட பின் அக்கேவல நிலை மறைந்து வருகிறது. பனைத் தொழிலாளர்கள், சமுதாயத்திலே உயர்ந்துவருகின்றனர். அரசாங்கமும், அகில இந்திய காதி கமிஷனும், தமிழ்நாடு காதி போர்டும் அவர்களுக்கான உதவியை அளிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இதனால் அவர்களின் பொருளாதாரம் சற்று உயர்வதற்கான வழியேற்பட்டிருக்கிறது. கருப்பட்டி மட்டுமே செய்ததற்கு அறிந்திருந்தவர்கள் இப்பொழுது பனங் கற்கண்டு, பனஞ் சர்க்கரை, மிட்டாய் வகைகள் முதலியன செய்து தொழிலபிவிருத்தி செய்து வருகின்றனர்.

தமிழ் நாட்டில், மாதவரம், கடப்பாக்கம், பரக்குன்னு ஆகிய இடங்களில் பனஞ் சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகள் நிறுவப்பட்டு வருகின்றன. இவைகள் ஒவ்வொன்றும் தினம் 1 டன் சர்க்கரை உற்பத்தி செய்யும். திருச்செந்தூரில் பனங் கற்கண்டு உற்பத்தி நிலையம் நடைபெற்று வருகிறது. திருச்செங்கோட்டிலும் பனங் கற்கண்டு உற்பத்தி நிலையம் ஆரம்பிக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பிரதம சங்கங்கள் பல மிட்டாய் தினுசுகள் செய்து வருகின்றன. பல சங்கங்களுக்கு சர்க்கரை தயார் செய்யும் சிறிய மிஷின்கள் கொடுக்கப்பட்டு சர்க்கரை செய்து வருகின்றன. 1960-ம் ஆண்டு புது டில்லியில் நடைபெற்ற அகில இந்திய பனைத் தொழிளர் மாநாட்டில் இந்தியாவிலேயே அதிக சர்க்கரை உற்பத்தி செய்ததற்காக இம்மாவட்டத்தைச் சேர்ந்த குள்ளம்பட்டி பிரதம பனைவெல்லக் கூட்டுறவு சங்கத்திற்கு அப்போதைய ஜனாதிபதி உயர்திரு டாக்டர் இராசேந்திர பிரசாத் அவர்களால் பரிசு கொடுக்கப்பட்டிருப்பது பெருமைக்குரியதாகும்.

சேலம் வட்டத்தில் மாக்னிசைட்டும், பாக்சைட்டும், இரும்பும், சங்ககிரி வட்டத்தில் குள்ளம்பட்டியில் அணுசக்திக்குரிய மூலப் பொருள்களான யுரேனியமும், கிரேனைட்டும் சங்ககிரியில் மிகத் தூய்மையான சுண்ணும்புக் கல்லும், நாமக்கல் வட்டத்தில், கல் நாரும், (ஆஸ்பெஸ்டாஸ்) திருச்செங்கோடு வட்டத்தில் குரோமைடும் பூமிக்கடியில் ஏராளமாகக் கிடக்கின்றன. இப்பூமியின் மேல் வளர்ந்துள்ள பனைகள் அதன் வேர்களின் வழியாக இக்கனிச் செல்வங்களின் சக்தியை உறிஞ்சி பதநீரில் சேர்த்து ஆகாரமாகக் கொடுக்கிறது.

**பதநீரின் குணம்**

இவ்வளவு சத்துள்ள பதநீரைப் பருகுவது உடலுக்கு நல்லது; ஆரோக்கியமானது; இயற்கையானது; இது ஏழைகளின் உணவு. பல வியாதிகளைப் போக்குகின்றன. சருமம் பாது காக்கப்படுவதுடன் முகப் பொலிவு ஏற்படுகிறது. இரத்த அணுக்கள் வலுவடைவதுடன்

இருதயம் வலுவடைகிறது. சத்துக்குறை நோய்கள் ஏற்படுவதில்லை. வாய்ப் புண் குணமாகிறது. இவ்வரிய பதநீர் சேலத்தில் இவ்வருடம் விற்பதற்குரிய ஏற்பாடுகள் எங்கள் சேலம் மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவு விற்பனைச் சம்மேளனம் ஏற்பாடு செய்து வருகிறது. தமிழ் நாட்டில் ஏற்கனவே சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் சுகாதார முறைப்படி பதநீர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நாட்டிலுள்ள எல்லா ஊர்களிலும் பதநீர் விற்பனைக்கு வழிவகை செய்வது அதனைப் பருகும் மக்களுக்கும், அதனை உற்பத்தி செய்யும் பனைத் தொழில் வல்லுநர்களுக்கும் பெரும் நன்மை பயக்கும்.

தமிழ்நாட்டில் 1,426 பனைவெல்ல உற்பத்தி கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. இதில் சுமார் 3 லக்ஷம் மக்கள் பனைத் தொழிலிலும் அதைச் சார்ந்த தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் சுமார் இரண்டு கோடி மதிப்புள்ள கருப்பட்டியை வருடந்தோறும் உற்பத்தி செய்கின்றனர். இவர்களின் உற்பத்தி செலவு அதிகமாக இருப்பதால் கருப்பட்டி உற்பத்தியில் உழைப்பிற்கேற்ப ஊதியத்தை அவர்கள் அடைய இயலவில்லை. செயல் படுத்தப்படும் திட்டங்கள், கொடுக்கப்படும் உதவிகள் ஆகியவைகள் பனைத் தொழிலாளர்களின் கூட்டமைப் பிற்கே பயனளிக்கக் கூடியவையாயுள்ளன. ஒவ்வொரு தனிப்பட்ட தொழிலாளியும் நேரடியாக அப்பயனை அடைய ஏற்பாடு செய்வது பெரும் பலனை அளிக்கும். கரும்பு சர்க்கரை உற்பத்தி செய்யும் ஆலைகளிலிருந்து 'செஸ்' (வரி) வசூலித்து பனஞ்சர்க்கரை உற்பத்தி செய்பவர்களுக்கு ரிபேட்டாகக் கொடுத்து உதவுவது பனைத் தொழிலாளர்களுக்கு பெரும் உதவியாக இருக்கும்.

தமிழ்நாட்டின் பனைத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் இங்கு கூடியிருக்கின்றனர். இவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பல பிரச்சனைகளுக்கு இன்று ஓர் முடிவு எடுக்கப்படுமென நினைக்கின்றோம். அகில இந்திய காதி கமிஷன் தலைவர் உயர்திரு. யூ. என். தேபர் அவர்கள் நல்ல முடிவுகளுக்கு வழிகாட்டியாய் அமைவாரென எண்ணுகிறோம். முக்கியமாய் சேலம் மாவட்டம் கூட்டுறவு அமைப்பில் இத்தொழிலை நல்ல முறையில் அமைத்து அபிவிருத்தி செய்து வருகிறது. இம்மாவட்டத்தில் 178 ஆரம்ப சங்கங்கள் உள. ரூ. 57 ஆயிரம் பங்கு தொகை கட்டியிருக்கின்றனர். ஆண்டுதோறும் சுமார் ரூ. 4 லட்சம் மதிப்புள்ள பனைவெல்லத்தை ஆரம்ப சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்து பிரதம சங்கங்களுக்கு உதவுகிறது.

இங்கு வருகை தந்திருக்கும் தலைவர்களையும், பிரதிநிதிகளையும், அதிகாரிகளையும் முழுமனதுடன் மீண்டும் வருக! வருக!! என வரவேற்கின்றோம்.

---


## விற்பனைக்குத் தயார்

| | | |
|---|---|---|
| பனைத் தொழில் | ... | ரூ. 3—50 |
| இனிக்கும் பதநீர் | ... | ரூ. 0—50 |

திரு. கே. சம்பந்தம் அவர்கள் எழுதியுள்ள மேற்கண்ட இருநூல்களும் விற்பனைக்கு தயாராகி உள்ளன. பனைத் தொழில் இசைத் தட்டுகளும் கிடைக்கும்.

வெளியிடுவோர் :

**சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்**

**66, கோடம்பாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-17.**

# தலைமைப் பேருரை

## திரு. வே. வ. இராமசாமி,

தலைவர், சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம்.

**சென்னை மாநிலத்தில் மதுவிலக்கை ரத்து செய்யக்கூடாது என்று திரு. வே. வ. இராமசாமி தமது தலைமையுரையில் வற்புறுத்தியிருக்கிறார். அத்துடன் பனைத்தொழில் அபிவிருத்திக்காக நல்ல யோசனைகளையும் அவர் கூறியுள்ளார்.**

*மதிப்பிற்குரிய திரு. தேபர் அவர்களே,*
*பனைத் தொழிலாளர் பெருமக்களே,*
*நண்பர்களே, வணக்கம்.*

இன்று இந்தப் பனைத் தொழிற் சங்கங்களின் மூன்றாவது மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றியைச் செலுத்திக் கொள்கிறேன்.

பூரண மதுவிலக்கால் பாதிக்கப்பட்ட பனைத் தொழிலாளர்களுக்குப் புனர் வாழ்வு கொடுப்பதற்காக மாநிலமெங்கும் 1958-ம் ஆண்டு ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மட்டுமே பதநீர் இறக்க அனுமதியளிக்க விதி உள்ளது. இந்த மாதிரியான ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருவாறு நல்ல முறையில் இயங்குவதைக் கண்டு மாவட்டச் சம்மேளனங்கள் நிறுவப்பெற்றன. காதிக் கமிஷன் மூலமாக ஏராளமான பண உதவியும், நுணுக்க உதவியும் கொடுக்க அரசாங்கத்தார் முன் வந்தமையால் திட்டங்களை அமுல் நடத்தும் பொருட்டு 1958-ம் ஆண்டு ஜனவரி மாதம் மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் என்ற பேரமைப்பு நிறுவப்பட்டது. அதன் பின்னரே நாம் கூடி விவாதித்து நம் தொழில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற எண்ணத்தால் தூண்டப்பட்டோம்.

### முதல் மாநாடு

அதற்காக முதலாவது மாநாட்டை அன்றைய உள்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் தலைமையில் கோவை மாவட்டம் குன்னத்தூரில் 20—11—'60, 21—11—'60 தேதிகளில் நடத்தினோம். அந்த மாநாட்டின் விளைவாகப் பனைத் தொழில் புரிவோரிடையே ஒரு எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் உண்டாயின. இதனால் ஒரு சமூகப் புரட்சி ஏற்பட்டதென்றே சொல்லலாம்.

### இரண்டாவது மாநாடு

9—2—'61-ல் திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியில் சிறப்பாக அன்றைய முதல் அமைச்சர் திரு. கே. காமராஜ் அவர்களால் இரண்டாவது மாநாடு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றது. அம்மாநாட்டில் கலந்து கொண்ட திரு. கே. காமராஜ் அவர்கள் விஞ்ஞான முறையில் பனைத் தொழில் வளர்ச்சி அடைய வேண்டும் என்று வற்புறுத்தி, நமக்கு ஊக்கம் அளித்தார். இம்மாநாட்டிலும் நம் தொழில் வளர்ச்சிக்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. இதுகாறும் சமுதாயத்துடன் தொடர்பின்றிப் பொது விவகாரங்களில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக் கொள்ளாது தனித்து வாழ்ந்த நம் பனைத் தொழிலாளர்கள் தாங்களும் முன்னேற வேண்டும் என்ற ஆர்வத்தைப் பெற்றனர். இத்தொழில் ஒரு விவசாயத் துறையுடன் சேர்ந்த தொழில் என உணர்ந்தனர்.

### மூன்றாவது மாநாடு

பாரதத்திலேயே முதன் முதலாக மதுவிலக்கை ஆரம்பித்த சேலம் மாவட்டத்தில் இந்த மூன்றாவது மாநாட்டைக் கூட்டியுள்ளோம். இம்மாநாடு சற்று முன்பே கூட்டப்படவிருந்தது. ஆனால் சீனப் படையெடுப்பின் காரணமாகவும், நம் தலைவர் திரு. யு. என். தேபர் அவர்களின் சௌகரியத்தை முன்னிட்டும் சற்றுக் காலதாமதமாக இம் மாநாட்டை கூட்டியுள்ளோம்.

இம்மாநாட்டில் நமது தொழிலை உறுதிப்படுத்திப் பொருளாதாரத் துறையில் உயர வேண்டுவதற்குப் பல ஆலோசனைகளைச் செய்து, முக்கியமாக நம்மை நோக்கியிருக்கும் பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்ற முடிவுடன் இந்த மூன்றாவது மாநாட்டைக் கூட்டியிருக்கிறோம்.

### மதுவிலக்கு

இந்தச் சந்தர்ப்பத்தில் சில மாநிலங்கள் மதுவிலக்குச் சம்பந்தமான சில கருத்து வேறு



மாநாட்டில் மாநில சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி
உரை நிகழ்த்துகிறார்.

பாடுகளைக் கொண்டுள்ளன. எல்லா வழிகளிலும் முன் நிற்கும் தமிழகத்தை மற்ற மாநிலங்கள் எதிர்பார்க்கின்றன எனலாம். மதுவிலக்குப் பற்றி உறுதியான கோட்பாட்டை வகுத்துக் கட்டுப்பாட்டுடன் செயல்பட்டாலன்றி இந்தச் சமூகமும், தொழிலும் வளராது. மதுவிலக்குக்கு முன்பு இருந்த நிலையிலிருந்து சற்று சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் முன்னேறிக் கொண்டுவரும் இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் மனக் குழப்பமடையக் கூடாது. நாம் இன்று சென்று கொண்டிருக்கும் பாதை நேர்மையானது, சரியானதும்கூட என்பதை உணர வேண்டும்.

1936-ம் ஆண்டு இந்தியாவில் முதல் முதலாக இம்மாவட்டத்தில்தான் மதுவிலக்குச் சட்டம் பரிட்சார்த்தமாகச் செயல்படுத்தப்பட்டு வெற்றி கண்டு, 1948-ல் தமிழகமெங்கும் அமுலாக்கப்பட்டது இதன் விளைவாகச் சிதறிக் கிடந்த பனைத் தொழில் வல்லுநர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ்க் கொண்டு வரப்பட்டனர். இன்று 1,426 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும், ஆறு மாவட்டக் கூட்டுறவுச் சம்மேளனங்களும், இதற்குத் தலைமையாக ஒரு மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுப் பேரமைப்பும் தோற்றுவிக்கப்பட்டன. புதிதாக நம்முடன் இணைந்துள்ள குமரி மாவட்டம் முழுதும் பனைத் தொழில் வல்லுநர்கள் நிறைந்துள்ளனர். சுமார் 70 புதிய கூட்டுறவு ஆரம்ப சங்கங்களை மேற்கொண்டு அமைக்கப்பட்டு வருகின்றன.

### மதுவும் சீர்கேடும்

கள்ளிறக்கி வந்த காலத்தில் பனைத் தொழில் வல்லுநர்களைப் பிற சமூகத்தவர் இழி தொழில் புரிவோராக மதித்தனர். சமுதாயச் சீர்குலைவையும், கிராமப் பொருளாதாரத் தாழ்வையும், பண்பாட்டு அழிவையும் ஏற்படுத்திய பழிக்கு ஆளாகிப் பலரின் வெறுப்புக்கு உட்பட்டிருந்தனர். மது அருந்தியோரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்களெனச் சொல்லப்பட்டவர்களும் வாழ்வில் அலங்கோலத்தையும், பிணக்கையும் ஏற்படுத்திக் கொண்டனர். உற்பத்தி செய்தோரும் உண்போரும் சமுதாயத்தில் இழிவான பெயரைப் பெற்றனர்.

மது அருந்தும் பழக்கம் மீண்டும் ஏற்படுமாயின் மிகப் பல குடும்பங்களின் நல் வாழ்வு சீர்குலையும், சமூக முன்னேற்றம் பெரிதும் தடைபடும். நமது நாட்டின் வளத்தைப் பெருக்கத் தேவைப்படும் பல்வேறு தொழில் நுணுக்க மேதைகளையும், தொழில் நுட்ப ஊழியர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் நம்மால் உருவாக்க இயலாதவர்களாக இருப்போம். மது உண்டு மயக்கத்தில் இருந்திருப்போமானால் இத்தகைய துரிதமான முன்னேற்றத்தைத் தமிழகம் கண்டிருக்க முடியாது என்பதை நான் உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். பின் தங்கிய வகுப்பினர், முக்கியமாகக் குடித்துக் குலைந்த குடும்பங்கள் கணிசமாக முன்னேறி இருப்பதற்கு மதுவிலக்குத்தான் காரணம்.

பெண்களின் முன்னேற்றத்திற்கு மதுவிலக்குப் பெரிதும் பயன்பட்டது. "மதுபானப் பழக்கமுடையோருக்கு வாழ்க்கைப்பட்ட பெண்களைக் கேளுங்கள், மதுவின் கொடுமை தெரியவரும்" என்று காந்தியடிகள் கூறியுள்ளார். மதுவிலக்கு வந்த பிறகு சண்டைகள் மறைந்தன. கல்வி முன்னேற்றமும் தெரிகிறது. பொருளாதார முன்னேற்றம் மதுவிலக்கால் அதிகரித்து வருகிறது என்பதை ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

### மதுவிலக்கும் தேசிய வருமானமும்

சிலர் மதுவிலக்கால் தேசிய வருவாய் குறைந்துவிட்டதாகக் குறை கூறுகின்றனர். இது சரியன்று. தமிழக முதலமைச்சர் கூறுகிறபடி மதுவிலக்கால ஏற்பட்ட வருமானக் குறைவு இதர வரிகளால் சரி கட்டப்பட்டுவிட்டது. அதிகமாகவே கிடைக்கிறது. எனவே மது கொடுத்துவந்த வருவாயை ஈடுசெய்ய விற்பனை வரி மூலம் சரிக்கட்டப்பட்டபின், வருவாய் குறைவு என்று வாதாடுவது பொருத்தமாகுமா?

கள்ளிறக்கப்பட்ட காலத்தில் உண்மையில் கள்ளிறக்கியவர்களையும், அவர்களைச் சார்ந்தவர்களையும் பொதுமக்கள் இழிவாகக் கருதினர். சமுதாயத்தில் அவர்கள் தலை நிமிர்ந்து நிற்க இயலவில்லை. ஆனால் மதுவிலக்கு அமுலுக்கு வந்தபிறகு புனிதமான பதநீரை இறக்கி உணவை உற்பத்தி செய்யும் ஒரு விவசாயியாகவே கருதப்பட்டு, தன்னுடைய பழைய இழிவு நிலையை மாற்றிச் சமுதாயத் துறையில் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள். எனவே கள்ளிறக்குவது மறுபடியும் அமுலுக்கு வருமாயின் மறுபடியும் இந்தச் சமுதாயம் பழைய நிலைக்கே போய்விடும் என்பதில் ஐயமில்லை, தமிழகத்தினைப் பொறுத்தமட்டில் மதுவிலக்கு தளர்த்தப்படமாட்டாது என்று உறுதியாகக் கூறி இருக்கும் முதலமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்களுக்குப் பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் இனத்தவர் சார்பாக நன்றி செலுத்தி, மதுவிலக்குத் தளர்த்தப்பட்டாலும் நாங்கள் கள் உற்பத்தி செய்ய மாட்டோம் என்று கூறி, மதுவிலக்குத் திட்டத்திற்குப் பூரண உதவி அளிக்கிறோம் என்று உறுதி கூறிக் கொள்கிறேன்.

### மதுவிலக்குக்கு மாற்றுத் தொழில்

பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் தொழில் வர்த்தக இலாகாவிலிருந்து மாநிலக் கதர்க் கிராமக் கைத்தொழில் போர்டிற்கு மாற்றப்பட்ட பிறகு ஒரு புத்துணர்ச்சி பெற்று இயங்கி வருகின்றன. பனைவெல்ல உற்பத்தியில் அதிக முன்னேற்றம் கண்டுள்ளோம். 1962—63-ம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்கள் சுமார் 10½ கோடி கிலோ பனைவெல்லத்தை உற்பத்தி செய்து சுமார் 2 கோடி 11 லட்சம் ரூபாய்க்கு விற்றுள்ளன. 1963—64-ம் ஆண்டில் 15 கோடி கிலோ பனைவெல்லம் தயார் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். இந்தியாவில் 1962—63-ல் உற்பத்தியான ரூபாய் 4·35 கோடி மதிப்புள்ள பனைவெல்லத்தில் பாதிக்குமேல் சென்னை மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பனஞ்சீனி, பனங் கற்கண்டு, மிட்டாய் முதலிய நவீனப் பொருட்களை ஆராய்ச்சி செய்து நவீன முறையில் பொதுமக்களின் விருப்பத்திற்கும், உருசிக்கும் ஏற்றவாறு கொடுத்து வருகிறோம். நடப்பு ஆண்டில் 30 லட்சம் கரும்புச் சீனி தயார் செய்ய வேண்டுமென்று திட்டமிட்டுள்ளார்கள். குறைத்தது 3 லட்சம் டன் பற்றாக்குறை ஏற்படும் என அஞ்சுகிறார்கள். நம் நாட்டின் சீனித் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யப் பனைத் தொழில் சங்கங்கள் இப்பொழுது ஈடுபட்டு உள்ளன. இதற்கென தமிழகத்தில் சென்னையை அடுத்த மாதவரத்தில் தினம் ஒன்றுக்கு 1 டன் பனஞ்சீனி தயார் செய்யும் இயந்திரம் நிறுவப்படுகிறது. ஆண்டிற்கு 120 டன் தயார் செய்ய திட்டமிட்டுள்ளோம். அடுத்து செங்கற்பட்டு மாவட்டம் கடப்பாக்கத்தில் தினம் ஒன்றுக்கு ⅓ டன் சீனி தயார் செய்யும் ஆலையையும், கன்னியகுமாரி மாவட்டத்தில் பரக்குன்னு என்னுமிடத்தில் தினம் ஒன்றுக்கு ⅓ டன் சீனி தயாரிக்கும் ஆலையையும் நிறுவுவதற்காக எல்லா முயற்சிகளும் நடந்து வருகின்றன. இந்த மூன்று திட்டங்களுக்கும் ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு பனை மரத்திலிருந்து சுமார் 17 கிலோ சீனி கிடைக்கும்பொழுது தமிழகத்திலுள்ள 4 கோடிப் பனைகளிலிருந்து எவ்வளவு சீனி பெறலாம் என்பதைப் பொருளாதார நிபுணர்களின் மதிப்பீட்டிற்கு விட்டுவிடுகிறேன். இந்தியாவிலுள்ள 5 கோடிப் பனைகளில் தமிழகத்தில் 4 கோடி பனைகள் உள்ளன என்பதை அறிந்து நாம் பெருமைப்படுகின்றோம். மேலும் மரத்திலிருந்து கிடைக்கும் ஓலை, மட்டை, ஈர்க்கு, தும்பு போன்ற இதரப் பொருள்கள் பனைத் தொழில் வல்லுநர்களுக்கு உப வருவாயைத் தருகின்றன. இவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்க்கும்பொழுது சுமார் ஒரு பனையிலிருந்து ரூ. 29 மதிப்புள்ள பொருட்கள் கிடைக்கின்றன. பனங் கற்கண்டுக்குப் பெயர்போன தமிழகத்தில் நவீன முறையில் கற்கண்டு தயாரிக்கப்படுகின்றன. அகில இந்திய ரீதியில் பயிற்சி கொடுக்கவும், வியாபார ரீதியில் உற்பத்தி செய்யவும் ரூ. 44 ஆயிரத்தில் திட்டம் வகுத்து இந்தத் திட்டத்தைத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூரில் நடத்தி வருகிறோம்.

### பல நாடுகளுக்கு தும்பு ஏற்றுமதி

நம் நாட்டிலிருந்து தும்பு பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை அபிவிருத்தி செய்து, அயல் நாட்டுச் செலாவணியைப் பெருக்க 1964—65-ம் ஆண்டிற்கு கதர் கமிஷன் ரூ. 1 கோடியை மனமுவந்து தந்திருப்பதை இங்குக் கூறி இதற்கு ஆதரவளித்த நம் தலைவர் திரு. யு. என். தேபர் அவர்களையும், பனைவெல்ல ஆலோசகர் திரு. கஜானன் நாயக் அவர்களையும் பாராட்டுகிறேன். நன்றியை உரித்தாக்குகிறேன்.

கதர்க் கிராமக் கைத்தொழில் கமிஷன் இத்தொழிலின் வளர்ச்சிக்காக 1958—59-ம் ஆண்டிலிருந்து 1962—63-ம் வருடம் முடிய ரூ. 14¾ லட்சம் மான்யமாகவும், ரூ. 22 லட்சம் கடனாகவும் கொடுத்து இத்தொழிலின் வளர்ச்சியை ஊக்குவித்து வருகிறது. 1963—64-ம் ஆண்டில் 1 கோடி 83 லட்ச ரூபாய் இத்தொழிலின் வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் அரசினருக்குப் பெரும் அக்கறையும், நம்பிக்கையும் இருக்கிறதென்பதை நான் சொல்ல வேண்டியதில்லை.

அதே சமயத்தில் பனைத் தொழில் வல்லுநர்களிடையே ஏற்பட்டுள்ள தன்னம்பிக்கையும், தொழிலைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்ற உறுதிப்பாடும் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. ஆகவே மறுபடியும் கள்ளுக்கடை திறக்கப்படுமாயின் நாமெடுத்துக் கொண்ட சிரமம் செலவழித்த பெருந்தொகை இவையெல்லாம் விரயமாக இவ்வல்லுநர்களுடைய வாழ்வும் சீர்குலைந்து விடுமென்று மீண்டும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

### வேண்டும் சலுகைகள்

பனைத் தொழிலைத் தொடர்ந்து நடத்தித் தன்னுடைய தன்மானத்தைக் காப்பாற்றிப் பொருளாதாரத்தையும், உயர்த்தி, நாட்டின் தேசிய வருவாயையும் பனைத் தொழில் வல்லுநர்கள் அதிகரிக்கச் செய்ய வேண்டுமாயின் கீழ்க்கண்ட பிரச்சினைகளை அரசாங்கம் உடனடியாகக் கவனிக்கவேண்டும். அதைச் செய்து இத்தொழிலை மேன்மேலும் வளரச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

1. (a) முதலாவதாகப் பனைத் தொழில் புரிவோருக்கு அரசாங்கப் புறம்போக்கிலுள்ள பனைகளையும், நிலத்தையும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றிக் கொடுத்துச் சங்கங்களை வளர்ச்சியடையச் செய்யவேண்டும்.

(b) விவசாயத் துறையில் ஈடுபட்டு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து உழைத்த உழவர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதற்காகச் சென்னை அரசாங்கம் 1955-ம் ஆண்டில் 24-வது சட்டம் ஒன்றை இயற்றினர்கள். அதன் மூலம் தங்கள் நிலத்தைக் குத்தகைக்கு விடும் சொந்தக்காரர்களுக்குப் பொருளாகவோ, பணமாகவோ பயிரிடுபவர்கள் இன்ன விகிதத்தில் செலுத்தவேண்டுமென்று நிர்ணயித்தார்கள். அதே மாதிரி பனை உற்பத்தித் தொழிலையும் ஒரு விவசாயத் தொழிலாகப் பாவித்துத் தக்கதோர் சட்டம் இயற்றி நிலமும் பனையும் சொந்த உரிமையில்லாத இந்த உற்பத்தித் தொழிலாளர்களுக்கு நியாயம் வழங்க அரசாங்கம் முன் வரவேண்டும்.

2. பஞ்சாயத்துக்கு மாற்றப்பட்ட அரசாங்கப் பனைகளையும் நிலங்களையும் ஏலம் விடாமல் பனைவெல்லச் சங்கங்களுக்கு மாற்றவேண்டும். இத்தருணத்தில் மதிப்பிற்குரிய அமைச்சர் மஜீத் அவர்கள் நம்பியூரிலும், அவிஞசியிலும் நடந்த பனைத் தொழிலாளர்கள் மாநாட்டில் இது விஷயமாகச் சிரத்தையுடன் கவனிப்பதாகக் கூறியுள்ளதைப் பாராட்டுகிறேன்.

3. வீடில்லாமல் தவிக்கும் பனைத் தொழில் புரிவோருக்கு ஆங்காங்குள்ள புறம்போக்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்து கொடுத்து வீடு கட்டிக்கொள்ள மான்யமும், கடனும் வழங்க வேண்டும்.

4. தேவஸ்தான நிலங்களில் உள்ள பனைகளைக் குறைந்த குத்தகைக்குப் பனைவெல்லச் சங்கங்களுக்கே கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

5. வீடு கட்டுவதற்கன்றி வேறு செங்கல் மால் போன்ற உபயோகங்களுக்கும் பதநீர் தரும் பனைகளை வெட்டாமல் அரசாங்கம் சட்டமியற்றவேண்டும்.

6. அரசாங்கப் புறம்போக்கிலுள்ள விளைச்சலுக்கு லாயக்கற்ற நிலங்களைப் பனை வளர்க்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுமதி தரவேண்டும்.

7. பனைத் தொழில் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் வெல்லத்திலிருந்து கட்டப் போகும் ரூ. 6 லட்சம் தொகையுடன் உதவித் தொகையாக 50 சத விகிதமான ரூ. 3 லட்சத்தையும் பனையிலிருந்து விழுந்து சேதமடைவோருக்காக ரூ. 1.50 லட்சமும் ஆக மொத்தம் 10.50 லட்சம் மதிப்பீடுள்ள திட்டத்தை விரைவில் அங்கீகரித்துத் தமிழகத்திலுள்ள பனைவெல்ல உற்பத்தியாளரை ஊக்குவிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

8. சேலம் மாவட்டத்தில் நடத்தும் பொருட்டு நாம் கொடுத்த தேசியப் பனைப் பொருள் திட்டத்தை விரைவில் அங்கீகாரம் செய்தல்.

9. வீடு கட்டக் கொடுக்கும் ரூபாய் 100 மான்யமும் 400 ரூபாய் கடனும் விலை உயர்வான இக்காலத்தில் போதாது. ஆகவே அதை 1,000 ரூபாயாக மாற்றும்படி காதிக் கமிஷனை ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

10. பனை வெல்லம் உற்பத்தி செய்வதில் விறகுக் கஷ்டம் அதிகம். எனவே மீண்டும் விறகு மான்யம் கொடுத்து உதவுதல்வேண்டும்.

11. சங்கங்களைச் செவ்வனே நடத்தத் தற்சமயம் மாவட்டங்களில் சரியான தலைமை ஊழியர்கள் இல்லை. சம்பந்தப்பட்ட தலங்களில் சரியான தலைவர்கள் தயாராகும் வரைக்கும் அரசாங்கத்திலிருந்து பனைத் தொழில் சங்கங்களின் வளர்ச்சிக்காக நியமிக்கப்பட்டுள்ள ஊழியர்களை வருட முழுவதும் பனைத் தொழில் வளர்ச்சிக்கே பணி செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

12. நான் தமிழகத்தில் சில இடங்களில் பனஞ் சீனி ஆலைகள் திறப்பதாகக் கூறினேன். பனஞ் சீனி தயாரிப்பதில் நாங்கள் முதன் முதலில் முயற்சி செய்வதால் உற்பத்தியாகும் சீனியின் அடக்க விலை கரும்புச் சீனியைவிடச் சற்று அதிகமாகலாம். அப்படி ஆகும்பட்சத்தில் அந்த வித்தியாசத் தொகையை ரிபேட்டாகச் சில ஆண்டுகளுக்குக் கொடுத்துதவும்படி அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

### பனைக்கிழார்க்கு ஒரு வேண்டுகோள்

வார முறையால் பனைத் தொழிலாளர்கள் அதிக ஊதிய நட்டமடைகின்றனர். உழைப்பில் நாற்பது சத விகிதம் அவர்களுக்குக் கிடைப்பதில்லை. வார முறையைச் சிறிது சிறிதாகக் குறைக்கப் பனை சொந்தக்காரர்கள் முன் வர வேண்டும். வினோபாஜி போன்றவர்கள் இயக்கத்திற்கு நிலங்களையும், கிராமங்களையும் தானமாகக் கொடுக்க நிலக்கிழார்கள் முன் வரும் போது பனைச் சொந்தக்காரர்கள் குறைந்த குத்தகைக்காவது பனையைக் கொடுத்துத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முன்வரவேண்டும். சட்டமியற்றி அமுல் நடத்துவதைவிட மரச் சொந்தக்காரர்கள் இதை ஒரு இயக்கமாக எடுத்துப் பதநீர் வார முறையைக் குறைக்க வேண்டுமென்று பனைத் தொழில் வல்லுநர்களின் சார்பாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

நன்றி

நமது தமிழக முதலமைச்சர் எதிர்பாராத விதமாக நமது மாநாட்டில் கலந்து கொள்ள இயலவில்லை. எனினும் கடந்த பல ஆண்டுகளாகப் பனைத் தொழிலில் பாதுகாவலராக இருந்து வருகிறார்கள். உடன்குடிப் பனைத் தொழில் வழிகாட்டி நிலையத்தை 1955-ல் துவக்கி வைத்தார்கள். சென்னையில் பதநீர் விற்பனை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. குன்னத்தூரில் நடந்த முதலாவது மாநாட்டைத் திறந்து வைத்து நம் பிரச்சினைகளைக் கேட்டு அதற்கான பரிகாரங்களைச் செய்துள்ளார்கள். கடலூரில் பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்தார்கள். அது இன்று நல்ல முறையில் நடந்து வருகிறது. பனைத் தொழில் வளர்ச்சியில் அவருக்குள்ள தனியான உற்சாகம் நம் பனைத்தொழில் வளர்ச்சிக்கு ஒரு பேராதரவாகும். நான் மேலே சொன்ன பிரச்சினைகளை அவர்கள் நிச்சயமாகத் தீர்ப்பார்கள். மதுவிலக்குச் சம்பந்தமாய் அவர்கள் மேற்கொண்டுள்ள உறுதியான முடிவைப் பனைவெல்ல உற்பத்தியாளராகிய நாங்கள் முழு மனதுடன் ஏற்று ஒத்துழைத்து மதுவிலக்கை வெற்றி பெறச் செய்யவோமென்று இங்கு உறுதி கூறுகிறேன்.

நம்முடைய மாநாட்டிற்கு வரவேண்டுமென்று முதலில் முயற்சித்து வர இயலாவிடினும் மறுபடியும் எப்படியாவது வந்து கலந்து கொள்ள வேண்டுமென்று முடிவு செய்து தனக்குள்ள அநேக அலுவல்களையும் பொருட்படுத்தாது இங்கு வந்து நம்மை ஊக்குவித்த திரு. யு. என். தேபர் அவர்கள் சென்னை மாநிலத்தில் நடக்கும் பனைத் தொழில் வேலையில் அதிக அக்கறை கொண்டவர்கள். நம்முடைய திட்டங்களுக்கு அன்பும் ஆதரவும் ஏராளமான பொருளாதார வசதியும் தந்து ஊக்குவிக்கத் தயாராக இருக்கிறார்கள். தன்னுடைய பழுத்த சமூக சேவையில் பனைத் தொழிலுக்குக் காட்டும் பேராதரவுக்குத் தமிழகப் பனைத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பனைத் தொழில் தந்தையாகிய திரு. கஜானன் நாயக் அவர்களைப்பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. பனைத் தொழிலாளர்களின் வாழ்வே தன் வாழ்வெனக் கருதும் அவருக்கு என் நன்றி. தமிழகப் பிரதிநிதியாக இருந்து கதர் கமிஷனுக்கு திரு. அருணாசலம் அவர்கள் உப-தலைவராக இருப்பது நமது பாக்கியம். அவர்களுக்கும் எனது நன்றி.

மாநிலக் கதர்க் கிராமக் கைத்தொழில் போர்டின் தலைவராக இருக்கும் கூட்டுறவு அமைச்சர் கனம் திரு. என். எஸ். எஸ். மன்றாடியார் அவர்கள் முக்கியமாக நமது தொழிலில் ஆர்வம் கொண்டு ஆதரவு காட்டி வருவது நமக்கு நிச்சயமாக நல்ல எதிர்காலம் இருக்கிறது என்பதற்கு அறிகுறியாகும். அமைச்சர் திரு. மன்றாடியார் அவர்கள் கடந்த 23—12—'68-ல் சென்னை நகரில் நடைபெற்ற தேசியப் பனைவெல்லத் தின விழாவில் கலந்து ஊக்கம் அளித்தார்கள். அமைச்சர் அவர்களுக்கு என் நன்றி. அதேபோன்று இத்தொழிலில் சிறந்த ஆர்வம் காட்டிவரும் கதர் போர்டின் உப-தலைவர் திருமதி அமிர்தா ராமசுப்ரமணியம் அவர்களுக்கும் என் நன்றி.

தொடர்ந்து இப்பணியில் ஆர்வம் குன்றாது ஈடுபட ஊக்குவித்து வரும் மாநிலக் கதர்க் கிராமக் கைத்தொழில் போர்டு காரியதரிசி திரு. வெ. பத்மநாபன் அவர்களை மறக்க முடியாது. மற்றும் கிராமக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் துணை இயக்குநர் திரு. டி. வி. ராமானுஜன் அவர்களுக்கும், மாநிலப் பனைவெல்ல நிர்மாணிகர் திரு. வி. கதிர்வேலு அவர்களுக்கும் நன்றி கூறுவதுடன் மாவட்டங்களிலுள்ள எல்லாக் கிராமக் கைத்தொழில் அதிகாரிகளும் இப்போது உற்சாகத்துடன் ஒத்துழைத்து வருவதையும் பாராட்டுகிறேன்.

இங்கு குழுமியிருக்கும் எல்லோருக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

---

பதநீரைத் தேன்போன்று இனிக்கும் பனைவெல்லமாக ஆக்கலாம். பனைவெல்லம் கரும்பு வெல்லத்தை விடத் தரத்தில் சிறந்தது. கரும்பு வெல்லம் இனிப்புடையது. பனைவெல்லமோ இனிப்பும், தீஞ்சுவையுமுடையது. ஏராளமாகப் பனைகள் இருக்குமிடங்களில் இவ்வெல்லம் எளிதில் தயாரிக்க முடியும். இதுவே நம் நாட்டின் வறுமையை அடியோடு களைந்தெரியச் சிறந்த வழியும், ஏற்ற பரிகாரமுமாகும்.

—மகாத்மா காந்தி.

---



திரு. தேபர் ஆற்றும் சொற்பொழிவை
திரு. க. அருணசலம் மொழிபெயர்க்கிறர்.

# துவக்க உரை

## திரு. யு. என். தேபர்

*(அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில்கள் கமிஷன் தலைவர்)*

**பனைவெல்லத் தொழிலாளர்களது குறைகளை எடுத்துக்கூறி உணரச் செய்யவேண்டு மென்று திரு. தேபர் தமது துவக்க உரையில் கூறினர். மதுவிலக்கு ரத்தாகக்கூடாது; அப்படி ரத்தாகும் நாள் துக்க நாள் என்றும் அவர் மேலும் கூறினர்.**

மாநாட்டைத் துவக்கி வைத்து அகில இந்தியக் கதர் கிராமக் கைத்தொழில்கள் கமிஷன் தலைவர் திரு. தேபர் பேசுகையில் கூறியதாவது :—இலட்சக் கணக்கான மக்கள் உள்ள கிராமோதயக் குடும்பங்களுடன் இருக்க எனக்கு மகிழ்ச்சி உண்டாகிறது. 20 லட்சம் மக்கள் கதர்த் தொழிலிலும், 20 லட்சம் மக்கள் வெல்லம், கண்டசாரி சர்க்கரைத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். நாட்டின் தேசிய வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கை இம்மக்கள் அளிக்கின்றனர்.

விவசாயிகள், கால்நடை வளர்ப்போர், தொழில் வினைஞர்கள், மற்றும் ஏழை வியாபாரிகள் ஆகியோரின் ஐக்கியத்தினால்தான் பொருளாதார நிலை பலமடையும். வருஷம் ஒன்றுக்கு வருவாய் தேடும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 400 கடன் உள்ளது.

### சர்க்கரை உற்பத்தி

அடுத்தபடியாக அவர் சர்க்கரை உற்பத்தியைப்பற்றி குறிப்பிட்டார். பாதுகாப்பு தந்து உற்பத்தியாகும் கரும்பு சர்க்கரையின் விலை ஒரு மணங்குக்கு ரூ. 29 ஆகிறது. ஆனல் எவ்வித உதவியும் இன்றி உற்பத்தியாகும் பனைவெல்லம் மணங்குக்கு ரூ. 23 அல்லது ரூ. 24 தான் ஆகிறது என்ருர். பனைவெல்லத் தொழிலாளர்களது குறைகளை எடுத்துக்கூறி, உணரச் செய்யவேண்டு மென்ருர் அவர். மதுவிலக்கு ரத்தாகக்கூடாது; அப்படி ரத்தாகும் நாள் துக்க நாள் என்றும் அவர் சொன்னர். இது சம்பந்தமாக எதிர் கட்சியினர் செய்யும் விஷமப் பிரசாரத்துக்கு யாரும் செவிசாய்க்கவேண்டாம் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

### பெல்ஜியம் ஏணிக்கு பாராட்டு

பின்னர், பெல்ஜியம் ஏணியையும், அண்ணாமலைப் பல்கலைக் கழக பொறியியல் நிபுணர் திரு. சூசை சேவியரின் முயற்சியையும் திரு. தேபர் பாராட்டினர். சென்னையில் பனைப்பொருள் உற்பத்தி வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது என்றும் அவர் சொன்னர். இதற்காக சென்னை மாநில சம்மேளனம், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்கள் செய்துவரும் சேவையையும் அவர் பாராட்டினர். பனைத் தொழில் வல்லுநர்கள், பூரண மதுவிலக்குக்கு ஆதரவு தருவதாக உறுதி கூறியது தமக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கிறது என்றும் தெரிவித்தார்.

திரு. தேபர் ஆங்கிலத்தில் பேசிய சொற்பொழிவை திரு. க. அருணசலம் மொழி பெயர்த்துக் கூறினர்.

அன்று காலை மாநாடு முடிவடைந்தது.

# பிற்பகல் மாநாடு

பிற்பகலில் மறுபடியும் மாநாடு, தமிழ் நாடு கதர், கிராமக் கைத்தொழில்கள் குழுச் செயலாயர் திரு. வெ. பத்மநாபன் அவர்களுடைய பேச்சுடன் தொடங்கியது. பின்னர் கதர் கிராமக் கைத்தொழில் கமிஷனின் பனை வெல்ல ஆலோசகர் திரு. கஜானன் நாயக் சொற்பொழிவாற்றினார். அதன் விவரம் வருமாறு:—

# திரு. கஜானன் நாயக் அவர்கள் சொற்பொழிவு

*அகில இந்திய பனைவெல்ல ஆலோசகர் திரு. கஜானன் நாயக் சொற்பொழிவாற்றுகையில் பனைத்தொழில் வளர்ச்சிக்காக 5 வழி முறைகளை எடுத்துக் கூறியுள்ளார்.*

சென்னை மாநிலத்தின் பொருளாதாரத்தில் பனைவெல்லம் மற்றும் பனைத் தொழில்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. தற்பொழுதுகூட பனைவெல்லம் மற்றும் பனைப் பொருட்கள் உற்பத்தி ரூ. 5 கோடி பெறுமானமுள்ளது ஆகும். இரண்டு லட்சம் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. இவ்வளவு இருந்தும்கூட இத்தொழிலுக்கு தேவையான கவனிப்பு சர்க்காரிடமிருந்தோ அல்லது பொது மக்களிடமிருந்தோ கிடைப்பதில்லை.

பனைவெல்லத்தொழிலானது மதுவிலக்கினால் பாதிக்கப்பட்ட மரமேறிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் ஓர் சாதனமாகத்தான் கருதப்பட்டு வருகிறது. விவசாய துறையில் பனைத்தொழில் மூலம் கிடைக்கும் நன்மைகள் கவனிக்கப்படுவதில்லை. தற்பொழுதுள்ள, பனை மற்றும் ஈச்சை மரங்களே இம்மாநிலத்திற்கு தேவையான சீனித் தேவையை பூர்த்தி செய்யமுடியும். அதன்மூலம் செழிப்பான நிலங்களை சர்க்கரை ஆலைகளுக்காக கரும்பு சாகுபடி செய்வதினின்றும் தடுக்கமுடியும். மாவட்டங்கள் அனைத்தும் கூட்டுறவுத் துறைமூலம் தங்களுக்கு தேவையான சீனியை பனைகளிலிருந்து உற்பத்தி செய்யமுடியும். 5 லட்சம் மரமேறும் வல்லுநர் குடும்பங்களுக்கு சீனி சுயதேவை திட்டம் மூலம் வேலை வாய்ப்பளிக்க முடியும்.

நிலமற்ற மரமேறும் தொழிலாளர்களுக்கு, பனை ஓலை மற்றும் பனைப் பொருட்களிலிருந்து நவீன மற்றும் அன்றாட வாழ்க்கைக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்ய தூண்டுவதின் மூலம் வருட முழுவதும் கண்டிப்பாக வேலை வாய்ப்பளிக்க முடியும். ஓலைகளை விறகாக பயன்படுத்துவதற்குப் பதில் பல பொருட்கள் செய்ய பனை ஓலைகளை உபயோகிக்கவேண்டும்.

### கூட்டுறவு சங்கங்கள்

கூட்டுறவு சங்கங்களை கிராம அடிப்படையிலிருந்து மாநில கட்டம் வரை பொருளாதார நிர்வாக துறையில் திறம்பட அமைத்தால் ஓர் மரமேறும் தொழிலாளியின் குடும்பத்திற்கு மாதம் ரூ. 100 வருமானம் நிச்சயமாக கிடைக்கச் செய்யலாம். அதுதான் ஒரு குடும்பத்திற்கு தேவையான குறைந்த அளவு வருமானம். இதற்காக வல்லுநர்களை நடுத்தர தரகர்களின் பிடியிலிருந்து மீட்கவேண்டும். மாநில சம்மேளனம், பல்வேறு மாவட்டங்களுக்கும் பொருந்தும் முறையில் கிராம, நகரங்களில் விற்பதற்கென்று பொதுவான விலையை வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியவைகளுக்கு வருடந்தோறும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். வியாபாரிகளை நீக்கவேண்டும். ஆனால் தற்பொழுதுள்ள பழக்கத்தை உற்பத்தியாளர், உபயோகிப்போர்களின் நலனுக்கான வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

கூட்டுறவு சங்கத்திற்கு தேவையான பணத்தை வியாபாரிகளிடமிருந்து டிப்பாசிட்டாக சப்ளை செய்யவிருக்கும் பொருட்களை அனுசரித்து வாங்கிக் கொள்ளலாம்.

## தொழில் அபிவிருத்தி

இம்மாநிலத்தின் தொழில் அபிவிருத்தி அமைப்பு முறையை சுயதேவை பூர்த்தியுள்ளதாக ஆக்கமுடியும். நவீன முறையில் பதநீர் விற்பனை செய்வது மிகவும் வருமானம் கிடைக்கக்கூடிய வழியாகும். 10 நகரங்களிலும் 10 புண்ணிய ஸ்தலங்களிலும் பதநீர் விற்பனை செய்வதில் ரூ. 5 லட்சம் வருமானம் கிடைக்கும். பனைவெல்லம், சீனி, கற்கண்டு விற்பனை மூலம் ரூ. 8 லட்சமும் மற்ற பனைப் பொருட்கள் மூலம் ரூ. 2 லட்சமும் கிடைக்கும். பனைத் தொழிலில ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் யாவரும் மனப்பூர்வமாக நாள் ஒன்றுக்கு ஒரு நயாபைசா நன்கொடை அளிக்க வேண்டும். இத்தொழிலில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களும் ஒரு நல்ல தொகை கொடுத்து வரவேண்டும். இப்படிப் பட்ட நன்கொடை ரூ. 6 லட்சம் வரும்; ஆக மொத்த வசூல் ரூ. 21 லட்சம் ஆகும். இத்தொகை இப்பொழுது காதி கமிஷனும் மாநில அரசாங்கமும் கொடுத்துவரும் தொகையை விட அதிகம். இப்பொழுதும் அரசாங்க உதவியை எதிர்நோக்கி இருக்க வேண்டிய அவசியம் இராது. தேவையானால் கடனாக அரசாங்கத்திடம் பணம் பெறலாம்.

சீரிய முறையில் பார்க்கும் இடத்து பனை வெல்லத் தொழிலை நவீன முறையில் அபிவிருத்தி செய்தால் பொருளாதார அடிப்படையுடன் கூடியதாகும்.

## மாறுதல் வேண்டும்

தொழிலை ஸ்திரப்படுத்த பின்வரும் மாறுதல்கள் செய்யப்பட வேண்டும்.

(1) கூட்டுறவு துறையின் நிர்வாகத்தின் கீழ் இருக்கும் வகையில் நல்ல தேர்ச்சி பெற்ற நிர்வாகஸ்தர்களையும் தொழில் நுணுக்க வல்லுநர்களையும் தயார் செய்தல். மாநில போர்டானது கூட்டுறவு துறையில் நம்பிக்கை வைத்து, தொழில் அபிவிருத்திக்கான உத்தியோகஸ்தர்களையும் பணத்தையும் மாநில சம்மேளனத்திடம் ஒப்படைத்து, சம்மேளனத்திடமிருந்து வரும் கோரிக்கைகளை பரிசீலிக்க மட்டும் ஓர் தேர்ந்த நபரை தன்னிடம் வைத்துக் கொள்ளவேண்டும்.

(2) பனைவெல்ல கூட்டுறவு சங்கங்களே பனை மரங்களின் உரிமையுள்ளவைகளாக ஆக்கும் சட்டம் இயற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். புறம்போக்கு நிலங்களிலுள்ள மரங்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு நீண்டகாலக் குத்தகைக்கு நேரிடையாக கொடுக்கப்படவேண்டும்.

(3) லைசென்ஸ் கொடுக்கும் முறையை தகுந்தமுறையில் மாற்றியமைத்து கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுக்கவேண்டும். லைசென்ஸின் கால வரம்பு ஐந்து வருடங்களுக்கு குறைவாக இருக்கக் கூடாது.

(4) சம்பந்தப்பட்ட இலாக்காக்களை, மதுவிலக்கு கேஸுகள் பிடிக்கும் விஷயத்தில் கூட்டுறவு சங்கங்களின் ஒத்துழைப்பைக் கேட்கும்படி அரசாங்கம் உத்தரவிட வேண்டும்.

(5) விவசாயத் துறை, காட்டு இலாகா, தொழில் இலாக்கா, சமூக நல இலாக்கா, சிறைச்சாலை, போலீஸ் முதலிய இலாகாக்கள் பனைத் தொழில வளர்ச்சியில் வெகு அக்கறை கொள்ள உத்தரவிட வேண்டும்.

(6) கூட்டுறவு, சங்கங்கள், உற்பத்தி விற்பனைத் துறையில் எடுக்கும் அக்கறையுடன் மரத் தொழிலாளர்கள் அன்றாட வாழ்க்கையில் அக்கறை காட்ட வேண்டும்.

குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ குன்றி அனைய செயின்

## ஐந்து புதிய யோசனைகள்

பனைத் தொழிலின் வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் நான் கீழ்க்கண்ட ஐந்து வழிமுறைகளை வகுக்கின்றேன்.

(1) திட்டமிட்ட பனை வளர்ச்சி: தற்போது இருக்கும் பனைகளுக்கு கூடுமான வரையில் உரமும் தண்ணீரும் கொடுத்தல்; பனைகளுக்கும் நிலத்தில் விவசாயப் பொருள்களையும் சாகுபடிச் செய்தல்; பனைகளின் (மரத்தின் பாகத்திலும்) மீதும் வளரக்கூடிய கொடி வகைகளையும் பயிர்ச் செய்யவேண்டும். இது மரமேறிகளுக்கு தேவையான உணவு தானியங்களைப் பெறவும் பொருளாதார சிக்கனத்திற்கும் வழி வகுக்கும்.

(2) நவீன முறையில் மரமேறுதல், பதநீர் இறக்குதல்—இவை உடனடியாக செய்யப்படவேண்டும். நஞ்சுண்டாபுரம் மரத் தொழிலாளி திரு. இராமசாமி செய்து காட்டியுள்ள சாதனை இதற்கு சான்ருகும். இம் முறையின் மூலம் ஒரு தொழிலாளி குடும்பம் மாதம் ரூ. 200 பெறமுடியும் என நிருபித்திருக்கிருர்—கயிறு பாலத்தின் மூலம் 100 பானை சீவ முடியும்.

(3) வெல்லம் காய்ச்சும் தொழிலுடன் பனை ஓலை, நார்களிலிருந்து நவீன அன்ருட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்தல், பனை ஏற்றம் இல்லாத காலத்தில் இவ்வேலைகளைச் செய்யவேண்டிய பயிற்சி அளிக்கவேண்டும்.

(4) சூரிய வெப்பத்தினுல் வெல்லம் செய்யும் முறையை பயன்படுத்த வேண்டும். விறகு கஷ்டத்தை தீர்க்க இது பயன்படும்.

(5) வெறும் பணம் மட்டும் வாழ்க்கையை சந்தோஷமாக்க முடியாது. தொழிலாளியின் சமூக நலத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

* * * *

## திருமதி அமிர்தா ராமசுப்பிரமணியம்

திரு. கஜானன் நாயக் பேசிய பின், கதர், கிராமக் கைத்தொழில்கள் குழுத் துணைத் தலைவி திருமதி அமிர்தா ராமசுப்பிரமணியம் நாட்டின் பொருளாதாரத்தில் பனைவெல்லத் தொழிலின் பங்கைப்பற்றி குறிப்பிட்டார். சென்னை மாநிலத்தில் இத்தொழில் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது என்றும், இங்குள்ள சாதனை மிகவும் பாராட்டுதற்குரியது என்றும் அவர் குறிப்பிட்டார். கிராமக் கைத்தொழில் பொருள்களையே அதிகமாக உபயோகிக்கும்படி எல்லா மக்களையும் அவர் கேட்டுக்கொண்டார்.

* * * *

## திரு. கே. சம்பந்தம்

அடுத்தபடியாக சென்னை மாநிலப் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனக் காரியதரிசி திரு. கே. சம்பந்தம் பேசுகையில், சேலம் மாவட்டத்தில் புதியதொரு தேசிய நினைவுத் திட்டத்தை நிறைவேற்றப் போவதாகத் தெரிவித்தார். காதிக் கமிஷனுல் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் இது இரண்டாவது ஆகும். முதலில் வர்தா சேவா கிராமத்தில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்துக்கு ரூ. 3.3 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது; கடன்கள், மானியங்கள் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. பல ஏக்ரா நிலங்களை வாங்கி, பனைகளை வளர்த்து, பதனீர் இறக்கும் வல்லுநர்களுக்கு குடியிருப்பு வசதி செய்து கொடுத்து அவர்களுடைய பொருளாதாரத்தை மேன்மையுறச் செய்யவேண்டியது இத்திட்டத்தின் நோக்கமாகும் என்ருர்.

## 'பனைத் தொழில்' நூல் வெளியீட்டு விழா

இவ்விழாவையொட்டி, சென்னை மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனச் செயலாளர் திரு. கே. சம்பந்தம் எழுதிய 'பனைத் தொழில்' என்னும் நூல் ஒன்றை கதர், கிராமக் கைத்தொழில்கள் கமிஷன் துணைத் தலைவர் திரு. க. அருணாசலம் வெளியிட்டார். நல்ல சிந்தனையுடன் வெளியிடப்பட்ட இந்நூலை, பனைத் தொழிலில் ஈடுபட்டோர்கள் படிக்கவேண்டியது அவசியம் என்று திரு. அருணாசலம் குறிப்பிட்டார்.

# தீர்மானங்கள்

மாநில கதர், கிராமக் கைத்தொழில்கள் குழு உறுப்பினரும், மாநில சம்மேளனத் துணைத் தலைவருமான திரு. கே. இராமலிங்கம், தீர்மானங்களைப் படித்து விளக்கிக் கூறினர். பின்னர் அவற்றை ஏற்று நிறைவேற்றுமாறு கேட்டுக்கொண்டார். (மாநாட்டிற்கு முதல் நாளன்று (26—1—'64) பல தீர்மானங்கள் பற்றி ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கெடுத்துக்கொண்டு ஆராய்ந்தனர். அவர்களுடைய விவாதத்தின்போது, சென்னை மாநில கதர், கிராமக் கைத்தொழில்கள் குழுச் செயலாளர், திரு. வெ. பத்மநாபன், தீர்மானங்களைப் பற்றியும் அவற்றின் முக்கிய அம்சங்களையும், நோக்கங்களையும் பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார்.)

1. பனைத் தொழில் அபிவிருத்தியை ஊக்குவித்த டாக்டர் ராஜேந்திர பிரசாத், காந்தியப் பொருளாதார அறிஞர் திரு. குமரப்பா, குன்னத்தூர் திரு. டி. கே. எம். அருணாசலம், அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜான் கென்னடி ஆகிய நால்வர் மரணத்திற்கு இம்மாநாடு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. இந்த மாநாட்டின் பிரதிநிதிகள் பூரண மதுவிலக்கின்மீது தங்கள் முழு நம்பிக்கையை தெரிவித்துக்கொள்வதுடன் மத்திய அரசினரை மதுவிலக்கைத் தீவிரமாக எல்லா ராஜ்யங்களிலும் அமுலாக்க ஒரு சீரான கொள்கையை கடைபிடிக்க நடவடிக்கை எடுக்கும்படி இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

3. நிலச் சீர்திருத்தம், விவசாயக் குத்தகைதாரர் சட்டங்களைப் போல் பனைவெல்லத் தொழிலிலும், மரச் சொந்தக்காரர்களுக்கும், பனைவெல்ல உற்பத்தியாளர்களுக்கும் உள்ள உறவை நிர்ணயம் செய்து பனைவெல்லத் தொழிலில் ஓர் உறுதி நிலை ஏற்பட சட்டம் வகுக்குமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. 1958–59-ம் ஆண்டு, பனைவெல்ல அபிவிருத்தித் திட்டத்தில் விறகு மானியம் வழங்க அனுமதிக்கப்பட்டமையால், நம் ராஜ்யத்தில் பனைவெல்ல உற்பத்தி அதிகரித்தும் உற்பத்தியாளர்களுக்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்கும் உள்ள உறவை பலப்படுத்தியும் செய்தமைக்காக அதற்கு மூலகர்த்தாவாக இருந்த திரு. கஜானன் நாயக் அவர்களுக்கு இந்த மாநாடு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. மேற்படி நன்மைகளைத் தொடர்ந்து அடைய விறகு மானியம் வழங்குவதை மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு அனுமதிக்க காதி கமிஷனை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

5. நம் நாட்டில் கரும்பு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தியாகும் சர்க்கரைமீது "செஸ்" விதித்து அதனால் கிடைக்கும் வருமானத்தைப் பனங்கற்கண்டு, பனஞ்சர்க்கரை ஆகியவைகளின் உற்பத்தி விலையிலுள்ள வித்தியாசத்தை ஈடுகட்ட உதவிப் பணமாக அளிக்குமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

6. வருங்காலத்தில் பனைத்தொழிலை உறுதிப்படுத்தக்கூடிய நிலையில் சம்பந்தப்பட்ட ஆரம்ப பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்களின் பகுதியிலுள்ள தீர்வையிடப்படாத தரிசு நிலங்களைப் பனை நடுவதற்கும், விறகுக்கு வசதியான செடிகளை வளர்ப்பதற்கும் நிபந்தனையுடன் ஆர்ஜிதம் செய்துத் தருமாறு அரசினரைக் கேட்டுக்கொள்கிறது. இதற்கான மூலதனச் செலவை கொடுக்குமாறு காதி கமிஷனை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

7. வனப் பகுதிகளிலும், மந்தை, வாரி போன்ற ஏரி, சாலை போக்குகளிலும், தேவஸ்தான நிலங்களிலும் வளர்ந்துள்ள பனைமரங்களையும் ஏற்கனவே 11 "சி" பட்டா போட்டு பட்டாதாரே பதநீர் இறக்க உபயோகிக்காத மரங்களையும் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு 11 "சி" பட்டா கொடுக்க சட்டமியற்ற அரசாங்கத்தை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

8. தற்போது கதர் கிராமக் கைத்தொழில் குழுவினரின் திட்டத்தின் கீழ் பனைவெல்ல உற்பத்தியாளர்களுக்கு வீடு கட்ட வழங்கப்பட்டுவரும் ரூ. 100 மானியம், ரூ. 400 கடன் என்பதை மாற்றி, ரூ. 300 மானியம், ரூ. 700 கடன் என வழங்க கதர் கிராமக் கைத்தொழில் குழுவை இம்மாநாடு கேட்டுக்கொள்ளத் தீர்மானிக்கிறது.

9. பூரண மதுவிலக்கை முதன் முதலாக நமது மாநிலம் முழுவதும் அமுலாக்கி, செயல் படுத்தி வருவதால் பனைத்தொழில் நல்ல முறையில் அபிவிருத்தியடைய சம்பந்தப்பட்ட தொழில் நுணுக்கங்களை ஆராய்ந்து அறியக்கூடிய முறையில் ஒரு நல்ல பெரிய ஆராய்ச்சி நிலையத்தை நமது மாநிலத்தில் ஆரம்பிக்க மானியம் கொடுத்துதவும்படி கதர் கிராமக் கைத்தொழில் கமிஷனை இம்மாநாடு கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கிறது.

10. நமது மாநிலத்தில் முதன் முதலாக மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்த சேலம் மாவட்டத்தில் தேசியப் பனைவெல்ல நினைவு திட்டத்தை வழங்கிய கதர் கிராமக் கைத்தொழில் கமிஷனுக்கு இம்மாநாடு நன்றி செலுத்துகிறது.

11. 1964–65-ம் ஆண்டு பனைவெல்ல அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 183 லட்சம் நம் மாநிலத்திற்கு ஒதுக்கிக் கொடுத்த கதர், கிராமக் கைத்தொழில் கமிஷனுக்கு நன்றி தெரிவிக்கிறது.

*　　*　　*　　*

சென்னை மாநிலக் கதர், கைத்தொழில் குழு உறுப்பினர் திரு. கே. பி. வி. கிரி வழி மொழிந்த பின்னர் தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

வல்லுநர்களுக்கும், பனைவெல்லக் கூட்டுறவு சங்கங்களுக்கும் தொழில் திறனுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மாநாட்டின்போது பல மரங்களில் விரைவாக ஏறி இறங்கிய 14 வயதுள்ள சிறுமி சரஸ்வதிக்கு தங்க மோதிரம் பரிசாக வழங்கப்பட்டது.

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்—குத்தொக்க சீர்த்த இடத்து

## நன்றி

கதர், கிராமக் கைத்தொழில்கள் கமிஷன், தலைவர் திரு. தேபர், துணைத் தலைவர் திரு. க. அருணாசலம், பனைவெல்ல ஆலோசகர் திரு. கஜானன் நாய்க் ஆகியோரும் ஏனையோரும் இம் மாநாட்டில் கலந்துகொண்டு வெற்றியடைய நடத்திக் கொடுத்ததற்கு சென்னை மாநில பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி தம் சார்பிலும், மாநில ஊழியர்கள் சார்பிலும் பாராட்டுதலைத் தெரிவித்தார். இறுதியில் வரவேற்புக்குழுத் தலைவர் திரு. பி. இராமலிங்கம் மாநாட்டுக்கு விஜயம் செய்து வெற்றிகரமாக நடத்தித் தந்ததற்கு தலைவர்கள், மற்றும் எல்லோருக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

தேசிய இன்னிசையுடன் மாநாடு முடிவுற்றது.

இரண்டு தினங்கள் (26, 27) தேதி இரவில் "வில்லுப்பாட்டு" நடைபெற்றது. திருசெங்கோடு மக்கள் ஏராளமாக வந்து ரசித்தார்கள். திரைப்படக் காட்சியும், நடைபெற்றது.

## உங்கள் கவனத்துக்கு...

"பனைச் செல்வம்" இதழில் இதர கிராமக் கைத் தொழில்கள் பற்றிய கட்டுரைகள், செய்திகள் முதலியவற்றைப் பிரசுரிப்பதென முடிவு செய்யப் பட்டுள்ளது. கிராமக் கைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், இத்தொழில்களில் நல்லார்வமுடைய ஊழியர்களும் ஆண்டு சந்தா ரூ. 3/- செலுத்தி பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். அனுப்பப் படும் விஷயங்களை பிரசுரிப்பதற்கு ஏற்றவாறு திருத்தவும், மாற்றவும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

—ஆசிரியர்.

# பனைத் தொழில் பொருட்காட்சி

தமிழ்நாடு பனை வெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூன்றுவது மாநாடு 26, 27—1—'64 ஆகிய தினங்களில் சேலம் மாவட்டத்திலுள்ள திருச்செங்கோட்டில் நடை பெற்றபோது மாநாட்டுத் திடலில் பனைத் தொழில் பொருட்காட்சி அரங்கு ஒன்று தனி யாக அமைக்கப்பட்டது. இதை மாநில சம் மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்கள் தலைமையில் மாநில கதர்—கிராமக் கைத்தொழில் கழக உறுப்பினர் திரு. கே. எஸ். சுப்பிரமணியக் கவுண்டர் எம்.எல்.ஏ., அவர்கள் 26—1—'64-ல் திறந்துவைத்தார்.

பொருட்காட்சியில் பனைமரத்தின் வேரி லிருந்து அதன் ஒவ்வொரு உறுப்பும் சமுதா யத்திற்கு எவ்வாறு பயன்படுகிறது என்பதை செய்முறை விளக்கங்களுடன் மாநில பனைத் தொழில் ஊழியர் பயிற்சி நிலையத்தார் காட்டி னர். வேரிலிருந்து பிரம்பு வேலை செய்தல், தண்டுபாகத்தைக்கொண்டு கட்டில், நாற்காலி கைத்தடிகள், விளக்குத் தண்டுகள் செய்தல், மட்டையால் நார் வேலை, பிரஷ் வேலை செய்தல் முதலியனவும் பனஞ்சீனியைக்கொண்டு மிட் டாய், ஜாம், நீராபிராஷ் முதலியன செய்தலும் காண்பிக்கப்பட்டன. திருச்செங்கோட்டிலுள் ளோரும், அருகாமையிலுள்ள கிராம மக்களும் அதிகாரிகளும் பொருட்காட்சியைப் பார்வை யிட்டு வியந்து பாராட்டினர்.

எல்லாவற்றிற்கும் மேலாக திரு. யூ. என். தேபர், திரு. க. அருணாசலம், திருமதி அமிர்தா ராமசுப்பிரமணியம், மாநில சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி, மாநில சம்மேளனத் துணைத் தலைவர் திரு. கே. இராம லிங்கம், திரு. கே. எஸ். சுப்பிரமணியக் கவுண்டர் எம்.எல்.ஏ., பனைவெல்ல ஆலோ சகர் திரு. கஜானன் நாயக், பத்திரிகை நிரு பர்கள், மற்றும் பெரியார்கள் நமது பொருட் காட்சி அரங்கை பார்வையிட்டுப் பாராட்டினர்.

நஞ்சுண்டாபுரம் தென்னைமர வழிகாட்டி நிலையத்தார் தென்னைமரப் பொருட்களை தங்கள் பார்வை அரங்கில் வைத்திருந்தனர். சேலம் மாவட்ட கிராமக் கைத்தொழில் அதிகாரி அவர்கள் அலுவலக ஊழியர்கள் தேன், கதர் போன்ற பொருட்காட்சியை அமைத்திருந் தனர். திருநெல்வேலி மாவட்ட சம்மேளனத் தார் பனந்தும்பு, இதர பனைப்பொருட்களை அரங்கில் வைத்துப் பார்வையாளர்களுக்கு விளக்கிக் காட்டினர். "பனைத் தொழில்" புத்தகமும், இசைத் தட்டுகளும் விற்பனை செய்யப்பட்டன.

## மரமேறப் புதுமுறை

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறி இயல் நிபுணர், கஷ்டமில்லாமலும், உடம்பில் காயம் ஏதும்படாமலும் பனையேறுவதற்காக, தாம் கண்டுபிடித்துள்ள புது முறையையும் செய்து காண்பித்தார். பெல்ஜியத்திலிருந்து வந்த அலுமினியம் ஏணியின் மூலம் பனை யேறும் முறையும் அஷ்டித்துக் காண்பிக்கப் பட்டது. இந்த ஏணியை ஒவ்வொரு மரத்துக்கு எடுத்துச் செல்வது மிகவும் எளிது. கயிற்றுப் பாலத்தின் மூலம் பல மரங்கள் ஏறிக் காண பிக்கப்பட்டது.

நமது நோக்கமெல்லாம் பனைத்தொழில் வலுவடைந்து பனைப் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டிருப்போருக்குப் போதிய ஊதியம் கிடைக்க வேண்டும் என்பதுதான்.

—கு. காமராஜ்.

பனைத் தொழில், கிராமக் கைத் தொழில் பொருட் காட்சியை
திரு. கே. எஸ். சுப்பிரமணியக் கவுண்டர் திறந்துவைக்கும் வைபவம்.



திருச்செங்கோட்டில், பனையேறும் வல்லுநர்களுடன், திருவாளர்கள் தேபர், க. அருணாசலம், திருமதி அமிர்தா இராமசுப்பிரமணியம், திரு. வே. வ. இராமசாமி இருப்பதைப் படத்தில் காணலாம்.

MADRAS

# தேசிய பனைவெல்ல தின விழா

முதன் முதலாகப் பனைத்தொழில் அபி விருத்தித் திட்டத்தை மத்திய அரசின் உணவு விவசாய இலாகா மூலமாக 23—12—1947 முதல் செயல்படுத்தத் துவங்கியதன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 23-ம் தேதியில் தேசிய பனைவெல்ல தினவிழா கொண்டாடப் பட்டு வருகிறது. இவ்வாண்டு 1963-ல் சிறந்த முறையில் இவ்விழாவினைக் கொண்டாட வேண்டுமென்ற நோக்குடன் பலபுதிய அம்சங் களுடன் 23-12-'63-ல் சத்தியமூர்த்தி பவன் கலையரங்கில் மாநில சம்மேளனத் தலைவர் திரு. வே. வ. இராமசாமி அவர்கள் தலைமையின் கீழ் கொண்டாடப்பட்டது.

21—12—1964-ல் சென்னை நகரிலுள்ள கல்லூரி மாணவ, மாணவியருக்கு பனைத் தொழில் பேச்சுப் போட்டி நடத்தப்பட்டு வெற்றி பெற்றவர்களுக்கு ரூ. 300 பெறுமான பரிசுகள் வழங்கப்பட்டன. பேச்சுப் போட்டி யின் நடுவர்களான டாக்டர் திரு. அ. சிதம்பர நாதன் செட்டியார் அவர்கள், கிராமக் கைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் துணை இயக்குநர் திரு. டி. வி. ராமாநுஜன் அவர்கள், ஓய்வுபெற்ற உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. கிருஷ்ணசாமி ஆகியோரின் தீர்ப்புப்படி கீழ்கண்டவர்களுக்கு அமைச்சர் கனம் திரு. என். எஸ். எஸ். மன்றுடியார் அவர்கள் பரிசு வழங்கினர்.

கோடம்பாக்கத்திலுள்ள விழுதமங்கலம் இராஜேஸ்வரி துவக்கப்பள்ளி மாணவ-மாணவி களின் கலா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சிறுமிகளான லல்லி-பப்பி சகோதரிகளின் முருக நடனம் அனைவரின் கருத்தையும் கவர்ந் தது. 'இனிக்கும் பதநீர்', 'ஏன் வளர்ந்தாய்' பனைமரமே என்ற சிறு நாடகங்களைப் பள்ளிச் சிறுவர்கள் திறம்பட நடித்துக்காட்டி பாராட்டு களைப் பெற்றனர். இந்நாடகத்தை நல்ல முறையில் நடத்திக்காட்டிய மேற்படி பள்ளித் தலைமை ஆசிரியை திருமதி ஏ. ஜி. ரெங்க நாயகி, ராஜகுமாரி ஆகியோரும், பாடசாலை ஆசிரியைகள் அனைவருக்கும் மாநில சம்மே ளனச் சார்பில் நன்றியும், பாராட்டுக்களும் தெரிவித்துக் கொள்ளப்பட்டன.

திரு. டி. எம். தங்கப்பா அவர்களின் தொழில் வணக்கப் பாடலுடன் துவங்கிய இவ்விழாவில் திருவாளர்கள் கே. பி. வி. கிரி, டாக்டர் எம். கோபாலமேனன், திரு. எம். வி. சம்பந்தமூர்த்தி ஆகியோரும், பரிசு பெற்ற குமாரி என். பாலா, குமாரி மணிமேகலை, குமாரி பொன்னருமை, திரு. விஜயராகவன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர். மாநில சம்மேளனக் காரியதரிசி திரு. கே. சம்பந்தம் அவர்கள் நன்றி கூறினர்கள்.

இரவில் தங்கப்பா குழுவினரின் வில்லுப் பாட்டு நடைபெற்றது.

கீழ்க்கண்ட ஊர்களிலுள்ள பனைவெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் தேசிய பனைவெல்ல தின விழாவை 27—12—63-ல் மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடின. அதிகாரிகளும், உறுப்பினர்களும் இவ்விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவு ஆற்றினர்.

சங்கரி; ஓலைப்பட்டி (சேலம்); செய்ய னூர் (வ.ஆ.); எக்கலாசபுரம்; எழுமகளூர் (தஞ்சை); திருப்பனந்தாள்; காமேஸ்வரம்; வேதாரண்யம்; சேத்தூர்; ஒட்டன் சத்திரம்; புத்தூர்; புனியங்குடி; இராயகிரி; ஆற்றங் கரை; கன்னியாகுமரி; காங்கயம்; தென் னிலை; தொட்டாம்பட்டி; மேல்கொண்டார் கோட்டை, மேலவங்காரம்; முன்னூர்; மீனாட்சிவலசு; குன்னம்பாளையம்; செம்மாண் டம்பாளையம்; செம்மங்கரை; காளிபாளையம்; காருடையம்பாளையம்; பால்பண்ணைச் சேரி; மூங்கில்குடி; சாயல்குடி.


உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு

# பனைத்தொழில் பேச்சுப் போட்டியில்
# பரிசு பெற்றவர்கள்

*

## முதல் பரிசு

குமாரி என். பாலா (B.A.) — வெள்ளித் தட்டு, குவளை
(எத்திராஜ் மகளிர் கல்லூரி)

## இரண்டாவது பரிசு

1. குமாரி மணிமேகலை — வெள்ளிக் குத்துவிளக்கு
(எத்திராஜ் மகளிர் கல்லூரி)

2. குமாரி அகிலநாயகம் —
(கிறிஸ்துவ மகளிர் கல்லூரி)

## மூன்றாவது பரிசு

திரு. ஆர். விஜயராகவன் —
(புதுக் கல்லூரி)

## பரிவுப் பரிசு

குமாரி ரூபிபொன்னருமை — ரூ. 25 ரொக்கப் பரிசு
(கிறிஸ்துவ மகளிர் கல்லூரி)

பரிவுப் பரிசு ரூ. 25-ஐ கந்தமாநகர் ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக டாக்டர் எம். கோபால மேனன் அவர்கள் அளித்தார்கள்.